**JAMAL MOHAMED COLLEGE(Autonomous)**
**TIRUCHIRAPPALLI 620 020**

**Department of Visual Communication**
**B.Sc., Visual Communication**

Dr. Ragunathan, Assistant Professor

அடிப்படை உரிமைகள் - (Media Laws and Ethics) Part 1

# அடிப்படை உரிமைகள்
# (Media Laws and Ethics) Part 1

கட்டுரை எழுத்துக்கள் :லினிஸ் ரகுநாத் (LINIS RAGUNATH)
முனைவர். இரகுநாதன், உதவி பேராசிரியர்




**அடிப்படை உரிமைகளின் வகைப்பாடு:**

- சமத்துவ உரிமை
- சுதந்திர உரிமை
- கலாச்சார உ ரிமைகள்
- அரசியலமைப்பு தீர்வழிகள் பெற உரிமை
- மேற்படி அடிப்படை உரிமையில் சொத்துரிமை நீக்கப்பட்டுள்ளது.
- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் அமைக்கப்பட்டதன் நோக்கமே சட்டத்தின் ஆட்சி நடைபெற வேண்டும் என்பது முக்கியம்.
- சிறுபான்மையினர் நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது அடிப்படை உரிமைகளின் மற்றொரு நோக்கமாகும். அரசு மற்றும் அரசு சம்பந்தப்பட்ட துறைகள் தலையிடும்போதுதான், அடிப்படை உரிமைகளின் தேவைப்பாடு எழும். அதாவது அடிப்படை உரிமைகளை அரசுக்கு எதிராகத் தான் எழுப்ப முடியும். தனி மனித செயல்களுக்கு எதிராக அடிப்படை உரிமைகளைக் கோர முடியாது.
- இந்திய அரசியலமைப்பில், நீதிமுறை மறுசீராய்வு அதிகாரம் பற்றி 13, 32, 226 போன்ற ஷரத்துகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- ஷரத்து 14 - சட்டத்தின் முன் சமத்துவம் மற்றும் சட்டங்களின் மூலம் நீ சமத்துவம்' என்பதில் 'சம பாதுகாப்பு' என்ற இரு சொற்றொடர்கள் ஆட்சியையும் சமநீதியையும் குறிக்கின்றன.
- ஷரத்து 15 சாதி, சமய, இன, வேறுபாடுகளினால் பாரபட்சம் காட்டாமை. ஷரத்து 16 சாதி, சமய, இன, பால், வம்சாவழி, பிறப்பிட, இருப்பிட வேறுபாடுகளினால் மட்டும் அரசு வேலையைப் பெறத் தகுதி இல்லை என்று எந்தக் குடிமகனுக்கும் பாரபட்சம் காட்டக்கூடாது.
- 1992ம் ஆண்டு நவம்பர் 16ம் தேதி டல் கமிஷன் பரிந்துரையின்படி சமூகரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் தங்கிய பிரிவினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு கொடுக்கப்பட்டது.
- ஷரத்து 17 தீண்டாமை ஒழிப்பு - தீண்டாமைச் சட்டம் 1955, பின்னர் இதனையே 'சிவில் உரிமைகள் / பாதுகாப்புச் சட்டம் என 1976ல் மாற்றப்பட்டது.
- ஷரத்து 18 பட்டங்கள் ஒழிப்பு' - ராணுவத்திலும் கல்வித் துறையிலும் சாதனை புரிவோருக்குப் பட்டங்கள் வழங்குவதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**ஷரத்து 19 சுதந்திர உரிமை**

**பேச்சு மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம்**

- பேச்சு மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம்
- ஆயுதங்கள் இல்லாமல் அமைதியாகக் கூட்டம் கூடுவதற்குச் சுதந்திரம்
- சங்கங்கள் அமைப்பதற்குச் சுதந்திரம்
- இந்திய ஆட்சிப்பகுதிக்குள் எல்லா இளுத்தம் வருவதற்கான சுதந்திரம்
- இந்தியாவின் எந்தப் பகுதியில் வசிக்கவும் குடியிருப்பதற்கும் சுதந்திரம்
- எந்தத் தொழிலையோ, வாணிகத்தையோ மேற்கொள்வதற்கான சுதந்திரம்.

**மேலும் ஷரத்துகள் :**

- 1978ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 44வது அரசியல் சட்ட திருத்தத்திற்கு முன்பு சொத்துரிமையானது ஷரத்து 31ன் கீழ் ஒரு அடிப்படை உரிமையாக இருந்தது. பின்னர் 300ன் கீழ் சாதாரண உரிமையாக்கப்பட்டது. ஷரத்து 31 நீக்கம் செய்யப்பட்டது.
- குற்றங்களுக்குத் தண்டனையளிப்பது குறித்த பாதுகாப்பு ஷரத்து 20 - இந்தப் பிரிவு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஏனெனில் அவசர நிலையின் போதும்கூட ஓர் ஆணை மூலம் இந்த உரிமையை நிறுத்திவைக்க முடியாது என்று அரசியலமைப்பின் 42வது திருத்தச் சட்டம் கூறுகிறது.
- ஷரத்து 21 - உயிருக்கும் தனிப்பட்ட சுதந்திரத்திற்கும் பாதுகாப்பு: சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள முறைப்படி அல்லாமல் எந்த ஒரு நபரின் உயிரையும் தனிச் சுதந்திரத்தையும் பறிக்க முடியாது என்று அரசியலமைப்பின் 21ஆவது பிரிவு உத்தரவாதமளிக்கிறது. இதுவும் அவசர நிலையின்போதும்கூட பிரிவு 359ன்படி ஓர் ஆணை மூலம் இந்த உரிமையை நிறுத்திவைக்க முடியாது.
- ஷரத்து 22 கைது செய்யப்படுவதற்கும், காவலில் வைக்கப்படுவதற்கும் எதிரான பாதுகாப்பு.
- ஷரத்து 22 (1) தடுப்புக்காவல் சட்டம். ஆலோசனைக்குழு போதுமான காரணம் இருப்பதாகக் கூறினால் ஒழிய எந்தச் சட்டத்தின் படியும் தடுப்பு மூன்று மாதங்களுக்கு மேல் போக அனுமதிக்கக்கூடாது. அத்துடன், எவ்வளவு காலத்திற்குத் தடுப்புக் காவல் என்பதையும் கண்டிப்பாகக் கூறியாக வேண்டும்.
- ஷரத்து 23 சுரண்டலுக்கு எதிரான சட்டவிரோதமாக மனிதர்களை வியாபாரம் செய்வது, "பெண்கள்' நிர்ப்பந்தப்படுத்தி வேலை வாங்குவது போன்ற சுரண்டல்களில் இருந்து பாதுகாப்பு அளிக்கிறது.

- ஷரத்து 24 - 14 வயதுக்கு சிறுவர்களைத் தொழிற்சாலைகளிலோ, சுரங்கங்களிலோ, அபாயகரமான தொழில்களிலோ வேலைக்கு அமர்த்துவதைத் தடை செய்கிறது.
- ஷரத்து 25 - குடிமக்கள், எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி எந்தச் சமயத்தையும் ஏற்கவும், பின்பற்றவும் பரப்பவும் அனைவருக்கும் சுதந்திரம் உண்டு.
- **ஷரத்து 26 -** எல்லா சமயத்தவருக்கும், பிரிவினருக்கும், சமயஸ்ரீ மற்றும் அறநிலைய அமைப்பு ஏற்படுத்திப் பராமரிக்க, சமயம் சம்பந்தப்பட்ட விஷயங்களைத் தாமே நிர்வகித்துக்கொள்ள, சொத்துக்களை வாங்கி நிர்வகிக்க அடிப்படைஉரிமையை அளிக்கிறது.
- **ஷரத்து 27 -** எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்தின் வளர்ச்சிக்காகவும், பராமரிப்பிற்காகவும் ஆகும் செலவுகளுக்காக வரி செலுத்துமாறு எந்த ஒரு நபரையும் கட்டாயப்படுத்த முடியாது.
- ஷரத்து 28 - முற்றிலும் அரசாங்க நிதியில் செயல்படும் கல்வி நிறுவனங்களில் சமய போதனை கூடாது என்று கூறுகிறது.
- **ஷரத்து 29 -** இந்தியாவின் எந்தப் பகுதியிலேனும் வசிக்கின்ற குடிமக்களின் எந்த ஒரு பிரிவினரும் தமக்கென்று பிரத்யேகமான மொழியையோ, எழுத்து வடிவத்தையோ, பண்பாட்டையோ கொண்டவர்களாக இருந்தால் அவற்றைப் பேணிக்காக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு.
- **ஷரத்து 30 -** சிறுபான்மையினர் அனைவரும் - அவர்கள் சமயச் சிறுபான்மையினரானாலும் மொழிச் சிறுபான்மையினரானாலும் அவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப, கல்வி நிறுவனங்களை உருவாக்கி நிர்வகிப்பதற்கு உரிமையுண்டு.
- **ஷரத்து 32 - 1.** நீதிப்பேராணை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல், ஒருவர் நேரடியாக உச்ச நீதிமன்றத்திலும் அரசியலமைப்பின் 3வது பகுதியில் தாக்கல் செய்யலாம்.
  ஆதாரம் : இது ஊடக பாடத்திட்டத்திக்கு பொருந்தும்.

  கட்டுரை எழுத்துக்கள் :லினிஸ் ரகுநாத் (LINIS RAGUNATH)
  முனைவர். இரகுநாதன், உதவி பேராசிரியர்
  Dr. Ragunathan, Assistant Professor

  Posted 17th July 2020 by LinisRagunath (லினிஸ் ரகுநாத்)
  Labels: STUDY MATERIAL